மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில்

# நாளை முதல் 3 நாட்களுக்கு பொங்கல் கலை விழா

## • களியாட்டம், கரகம், காவடி கோலாகலம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், எழும்பூர், சைதாப்பேட்டை மற்றும் திரு மங்கலம் மெட்ரோ ரயில் நிலை யங்களில் நாளை முதல் 12-ம் தேதி வரை 3 நாட்கள் பொங்கல் கலை விழா நடைபெற உள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வரும் மெட்ரோ பொங்கல் கலை விழா இந்த ஆண்டு 10, 11 மற்றும் 12-ம் தேதிகளில் நடைபெறுகிறது.

**மாலை 5.30 மணிக்கு..**

தஞ்சையில் உள்ள தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளோடு கொண்டாடப்பட உள்ள இவ்விழா சைதாப்பேட்டையில் நாளையும் (10-ம் தேதி), எழும்பூரில் 11-ம் தேதியும் மற்றும் திருமங்கலத்தில் 12-ம் தேதியும் மெட்ரோ ரயில் நிலையங்களில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு ரயில் நிலையத் திலும் மாலை 5.30 மணிக்கு நடக்கும் இந்நிகழ்ச்சியில், தெலங்கானாவை சேர்ந்த அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம், விஜயம் கார்த்திக் குழுவினரின் பரதநாட்டியம், திருவாரூர் கே.ஜெகன்நாதன் குழுவினரின் கரகம், காவடி, களியாட்டம், கொக்கலிக்கட்டை உள்ளிட்ட நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகளும், தஞ்சை டி.ஜி.ராஜு குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சியும் நடைபெறும். இக்கலை நிகழ்ச்சி களைக் கண்டு ரசிக்க பொதுமக்களுக்கு அனுமதி இலவசம் என சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள் ளது.